| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| **உறுப்பினர் செயலர்,**<br>சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,<br>எண். 1, காந்தி இர்வின் சாலை,<br>எழும்பூர், சென்னை – 600 008. | 1) ஆணையர்,<br>திருவொற்றியூர் நகராட்சி,<br>சென்னை – 600 008.<br>2) செயல் அலுவலர் பேரூராட்சி<br>சின்னசேக்காடு<br>சென்னை-600068. |

கடித எண். சி2/8886/2005 நாள் : 19-09.2007.

அய்யா,

பொருள் : செ.பெ.வகு. – திட்ட அனுமதி – நில அளவை எண்.268 – 273 சாத்தாங்காடு மற்றும் 67/7–10, 74/1, 75/4, 5, 76/1, 2, 77/1–8, 78/1–3, 79/1–9, சின்ன சேக்காடு கிராமங்கள் கூடுதல் தொழிற்சாலைக்கட்டிடம் கட்ட ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக.

4/10/07

DESPATCHED

பார்வை :
1. திருவொற்றியூர் நகராட்சி ஆணையர் கடித எண்.8/2005/எப்.1 நாள் 22/02/2005 இல் பெறப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பம்.
2. சின்ன சேக்காடு செயல் அலுவலர் சிறப்பு சிற்றூராட்சி கடித எண்.497/2005, நாள் 16.03.2005 இல் பெறப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பம்.
3. இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் ~~16.07.2007~~ 11.10-2006.

*****

நில அளவை எண். .268 – 273 சாத்தாங்காடு மற்றும் 67/7–10, 74/1, 75/4, 5, 76/1, 2, 77/1–8, 78/1–3, 79/1–9, சின்ன சேக்காடு கிராமங்கள் கூடுதல் தொழிற்சாலைக்கட்டிடம் கட்ட பார்வை 1ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம், பார்வை 3 இல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

2. விண்ணப்பதாரர் பார்வை 2 ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக் கொண்டு ரசீது எண்.15803, நாள் 10.11.2006 இல் கீழ்க்கண்ட கட்டணங்களை செலுத்தியுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | நிலம் மற்றும் கட்டிட வளர்ச்சிக் கட்டணம் தமிழ்நாடு வளர்ச்சி மற்றும் ஊரமைப்புச் சட்டம் (1971இல் பிரிவு 59ன் கீழ்) | ரூ.64,000/– (ரூபாய் அறுபத்து நான்காயிரம் மட்டும்) |
| 2. | கூர்ந்தாய்வுக் கட்டணம் | ரூ.17,000/– (ரூபாய் பதிநேழாயிரம் மட்டும்) |
| 3. | வரன்முறைக் கட்டணம் | – |
| 4. | திறந்தவெளிக் கட்டணம் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதி 19 (b) (1) (vi) 1 (b) (ii) (vi), 17 (a) – 9 | – |
| 5. | காப்புறுதிக் கட்டணம் (உத்தேச வளர்ச்சிக்காக) | – |
| 6. | கழிவுநீர்த் தொட்டிக்கான காப்புறுதி கட்டணம் | – |
| 7. | அறிவிப்புப் பலகைக்கான வைப்பு நிதி | – |

3. அனுமதியளிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மழை நீர் சேகரிப்பு நடவடிக்கைகள் குழுமத்திற்கு திருப்தி அளிக்கும் வகையில் அமையாதிருப்பதும், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மீறியதாகவும், வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்கு முரணணாதாகவும் கருதப்பட்டு அமலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

4. மேலும் இவ்வொப்புதல் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்படுகிறது. அரசாணை எண்.191, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 01.06.2007க்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள நீதிப்பேராணை மனு எண்.20587 / 2007 மற்றும் பிற வழக்குகளின் முடிவிற்கேற்ப உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் செலுத்தக் கோரும் கடிதம் கிடைத்த 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாவிடில் திட்ட அனுமதி இரத்து செய்யப்படும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5. கிணறுகள், மேல் நிலைத் தொட்டிகள் மற்றும் கழிவுநீர்த் தொட்டிகள் சுகாதார முறையில் உறுதியாக மூடப்பட்டு கொசுத் தொல்லைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

6. சி/1482/21எ–எல்/2007, நாள் 19 – 09 – 2007 என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்களின் தொகுதிகள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 19 – 09 – 2007ல் இருந்து 18–09.2010 வரை செல்லுபடியாகும்.

7. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு, விண்ணப்பதாரர் திருவொற்றியூர் நகராட்சி மற்றும் சின்ன சேக்காடு சிற்றூராட்சியை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகுதான் கட்டிடத்தைக் கட்ட த் தொடங்கலாம்.

8. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கைகளை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

19/9/07

உறுப்பினர் செயலருக்காக.

இணைப்பு:

1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் இரண்டு படிகள்
2. திட்ட அனுமதியின் இரண்டு படிகள்

18/9/2007 18/9/07

நகல்:

1. சீடெக்ஸ் பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட்,
   சின்ன சேக்காடு, மணலி, சென்னை– 600 009.

2. உறுப்பினர், உரியதுறை (Appropriate Authority),
   108, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

3. வருமான வரி ஆணையர்,
   108, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

4. துணை திட்ட அமைப்பாளர்,
   செயலாக்கப் பிரிவு, செ.பெ.வ.குழுமம், சென்னை – 8.

வடக்கு 28/4